**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.01/2018** P.W. 20

Deposition of witness for Prosecution:

Name : சுரேஷ்குமார் Father's Name .

Village : Age :

Date : 03.10.2022

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 03.10.2022

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது சிவகங்கை நகர காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.03.2016 ந் தேதி தூத்துக்குடி தெற்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது தூத்துக்குடி தெற்கு காவல் நிலையத்தில் பணிபுரிந்த தலைமை காவலர் 343 பாலமுருகன் என்பவர் கடந்த 04.03.2016 ம் தேதி 13.00 மணிக்கு தூத்துக்குடி நகர உட்கோட்ட காவல் உதவி கண்காணிப்பாளர் அவர்கள் முகாம் அலுவலக N.Fef:165/GDP @/SDO/TUT TOWN/2016 ன் படி வரப்பட்ட புகார் மனுவை பெற்று தூத்துக்குடி தெற்கு காவல் நிலைய குற்ற எண்.380/2016 சட்ட பரிவு 363 இதச படி வழக்கு பதிவு செய்து எனது மேற்பார்வைக்கு வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையினை பெற்று பார்வையிட்டு விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 14.00 மணிக்கு சாட்சிகள் 1. ஜெயந்தி, 2. சுகன்யா, தலைமை காவலர் பாலமுருகன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணையில் இருந்து வழக்கின் சம்பவ இடமான நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி காவல் சரகத்திற்கு உட்பட்டது என்று தெரியவந்ததால் தூத்துக்குடி தெற்கு காவல் நிலைய பொது நமூணா எண் 53, நாள் 4.3.2016 ந் தேதி பிறகாரம் தூத்துக்குடி காவல் நிலையத்திற்கு அனுப்பிவைத்தேன். இது சம்மந்தமாக சிபிசிஜடி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்களா.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**.

தூத்துக்குடி காவல் துறையில் இருந்து வரப்பெற்ற நமூணா மூலம் முதல் தகவல் அறிக்கை மட்டும் பதிவுசெய்ய உத்தரவாகியிருந்ததா என்றால் முதல்

தகவல் அறிக்கை பதிவு செய்து நடடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருந்ததது. ஜெயந்தி மற்றும் சுகன்யா ஆகியோரை அவரது பகுதிகளுக்கு சென்று விசாரித்தேன். சாட்சிகளை அவரவர் வீட்டிற்கு போய் விசாரித்ததாக சிபிசிஜடி போலிசிடம் சொன்னேனா என்றால் சாட்சிகளை விசாரித்ததாக மட்டும்தான் சொல்லியிருக்கிறேன். எங்குபோய் விசாரித்தேன் என்று சொல்லவில்லை. நான் ஜெயந்தியையும் சுகன்யாவையும் விசாரித்து வாக்குமூலமே வாங்கவில்லை என்றும் அதனால்தான் எங்குபோய் விசாரித்தேன் என்று சிபிசிஜடி போலிசிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மேல் விசாரணை தொடர ஆள்வரை உள்ள காவல் நிலையம் வேளாங்கண்ணி காவல் நிலையம் என்றால் சரிதான். சிபிசிஜடி ஆய்வாளர் என்னை திருநெல்வேயில் வந்து விசாரித்தார். சிபிசிஜடிபோலிசார் என்னை திருநெல்வேலிக்கு வந்து விசாரித்த விபரத்தை குறிப்பிட்டு என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லவில்லை. சிபிசிஜடி போலிசார் என்னை விசாரித்து வாக்குமுலம் வாங்காதததாலதான் நான் திருநெல்வேலிக்கு வந்து சிபிசிஜடி விசாரித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சிபிசிஜடி காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் சொல்லிக்கொடுத்தப்படி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**